# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக்கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 02 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.ஓ. (கூட்) 23/2007

**சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவனமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்தோடு சம்பந்தப் பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென சம்மாந்துறையில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருப்பதாதலாலும் :

சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாலும் கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாலும் அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சம்மாந்துறை தப்லீக் இஸ்லாம் அரபுக் கல்லூரியைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் 'அரபுக் கல்லூரி' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியில் தற்போது உறுப்பினர்களாக உள்ள அத்தனை ஆட்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவருமான அத்தகைய வேறு ஆட்களும்

(இதனகத்துப்பின்னர் 'கூட்டுத்தாபனம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி என்னும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தலும் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் திருத்தவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) இஸ்லாமிய மதநம்பிக்கையின் பற்றாளர்களுக்கு இஸ்லாமிய கோட்பாடுகள் அடிப்படையிலான ஆத்மீகக் கல்விக்கான சிறப்பான வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஆ) இஸ்லாமிய மதநம்பிக்கையில் கல்விகற்று உலமாக்களாக வெளியேறுவோர் பக்தியான பழக்கங்களை மனதில் பதியவைக்கின்றதும் துன்மார்க்கமானவற்றை விலக்குவதுமான தக்வாப்பில் சேவையைப் புரிய அவசியமான பயிற்சிகளை ஏற்பாடுசெய்தல் ;

(இ) தமது ஆத்மீகக் கல்வியை பந்தி (அ)வின் கீழ் முடித்தவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகளை வழங்குதலும் தனிப்பட்ட ரீதியாக வாழ்வில் இஸ்லாமிய வழிகளை பின்பற்றுதலும் மற்றும் வாழ்வின் இஸ்லாமிய வழிகளில் இஸ்லாமிய சமூகத்தை வழிநடத்திச் செல்லுதலும் ;

(ஈ) இத்தகைய குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வேறு கலைகளைப் பழகுவதற்கு இஸ்லாமிய மதநம்பிக்கையின் பற்றாளர்களுக்கு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) இஸ்லாமிய மதநம்பிக்கையின் பற்றாளர்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் அவர்களுக்கு வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல் ; அத்துடன்

(ஊ) சமூக, கலாசார, கல்வி, பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கில் இஸ்லாமிய மதநம்பிக்கையின் பற்றாளர்களுக்கு சுயபயிற்சி யளித்தல்.

**4.** இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைவாக, கூட்டுத்தாபனம் பின்வருவன வற்றுக்கு தத்துவமுடையதாதல் வேண்டும் : கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

(அ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிச் சீட்டுகள் மற்றும் கைமாற்றத்தகு சாதனங்களை வரைதல், ஏற்றல், கழிவீடு செய்தல், புறக்குறிப்பீடு செய்தல், மாற்றுதல், வாங்குதல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கி அல்லது வங்கிகளில் கணக்கு களைத் திறத்தல், செயற்படுத்துதல், பேணுதல் மற்றும் மூடிவிடுதல் ;

(ஆ) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலவளங் களிலிருந்து பணவகையாகவோ வேறுவகை யாகவோ நன்கொடைகளையும் வளங்களையும் கொடைகளையும் மானியங்களையும் ஒப்பப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதல் அல்லது சேகரித்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அதற்குச் சொந்தமான நிதிகளைப் போதுமான பிணைப்பொறுப்புக்களில் முதலீடுசெய்தல் அல்லது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தகுந்தவையான அல்லது அவசியமானவையான அத்தகைய காணிகளை, கட்டடங்களை, பண்டங்களை அல்லது தளபாடங்களை அல்லது வேறு ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் அல்லது கையேற்பதில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான அல்லது அதன் வசம் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் கட்டடங்களை கட்டுதல் அல்லது கட்டுவித்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு மதியுரை கூறுவதற்கெனவும் நிதியுதவியளிப்பதற்கெனவும் ஆதரவாளர்கள் சபையொன்றைத் தெரிந்தெடுத்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு இடைநேர்விளைவானதும் உசிதமானதுமான அத்தகைய வேறு கருமங்களை புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமை.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய இருபத்தைந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபை இச்சட்டம் நடைமுறைக்குவரும் நேரத்தில் பதவிவகிக்கும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டதாதல் வேண்டும்.

பொதுச் சபை.

**6.** (1) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க தேர்ந்தெடுக்கப்படும் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களை கொண்டமைந்ததாக பொதுச்சபையொன்று இருத்தல் வேண்டும்.

(2) பொதுச்சபையானது எல்லாக் கருமங்களிலும் பணிப்பாளர் சபைக்கு மதியுரையளித்தல் அதற்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) பணிப்பாளர்கள் சபையானது, பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

**7.** *(1)* காலத்திற்குக்காலம், ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மையான வாக்குகளைக் கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராக விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையான தாதல் வேண்டும் :-

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தல், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், இடைநிறுத்தம் செய்தலும் உறுப்பினர்கள் விலகுதலும் அல்லது அவர்களை விலக்குதலும் ;

(ஆ) பணிப்பாளர் சபை மற்றும் பொதுச்சபையை தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்துவங்களும், நடத்தைகளும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் நியமனமும், பதவி விலக்கலும் தத்துவங்களும், கடமைகளும், ஒழுக்கமும் ;

(ஈ) பணிப்பாளர் சபை மற்றும் பொதுச்சபையை கூட்டுத்தாபனம் அல்லது அதன் ஏதேனும் உப குழுவின் கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அக்கூட்டங்களைக் கூட்டுதலும், நடத்துதலும், வெற்றிடங்களை நிரப்புதலும் அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் கரும மாற்றுதலும் ;

*(2)* ஓராமுட்பிரிவின் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் காலத்துக்குக்காலம் ஏதேனும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதேகூட்டத்திலும், அதேமுறையிலும் மாற்றப்படுதல் வேண்டும். அதற்குச் சேர்க்கப்படுதல் வேண்டும் அல்லது நீக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும், மாற்றப்படும், சேர்க்கப்படும், திருத்தப்படும் அல்லது நீக்கப்படும் விதி ஒவ்வொன்றும் பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையுமான கடன்கள்.

**8**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று கூட்டுத்தாபனத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட நிறுவனத்திற்கு சேர்மதியாகவுள்ள ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் என்பன யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கெனச் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருத்தல்.

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றல் உடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் விற்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்துடன் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**10**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புகள், கைமாற்றங்கள், நன்கொடைகள் அல்லது ஒப்பப்பணங்கள் அத்துடன் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் கூட்டுத்தாபனத்தின் பெயரில் பணிப்பாளர்கள் சபையினால் முடிவுசெய்யப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது பல வங்கிகளில் வைப்பிலிடப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம், மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய எவரேனும் இருவரினது முன்னிலையிலல்லாமல் எத்தகைய சாதனம் எதிலும் பொறிக்கப் படலாகாது. அவர்கள் சமுகமாக இருந்ததற்குச் சான்றாக அச் சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

*கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

***13.*** *கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக் கப்படல் ஆகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையதும் அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடைசெய்யப்பட் டுள்ளனவுமான வேறு நிறுவனத்துக்கு அல்லது நிறுவனங் களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.*

*குடியரசினதும் வேறு ஆட்களினதும் உரிமைகளைப் பேணல்.*

***14.*** *இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமை களையேனும், ஏதேனும் மக்கள் குழு அல்லது கூட்டிணைக்கப் பட்ட குழுவினது உரிமைகளையேனும் பாதித்தலோ அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதலோ ஆகாது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***15.*** *இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்